## இறுதிக்கட்ட ஆயுதங்களை சீனா வழங்கியது

இறுதிக்கட்ட தாக்குதல்களுக்காக `சிகப்பு அம்புகள்' (றெட்அறோ) அயுதங்கள் உள்ளிட்ட பெருமளாவன ஆயுதங்களை கோத்தபாய ராஜபக்சவே கொள்வனவு செய்தார் என்று 58 டிவிசன் படைத்தளபதி மேஜர் ஜென்றல் சிவீந்திர சில்வா தெரிவித்துள்ளார். சிறீலங்காப் படையினரின் இறுதிக்கட்ட வெற்றி தனிநபர் வெற்றி அல்ல அது ஒரு கூட்டு முயற்சிகளின் செயற்பாட்டால் கிடைத்த வெற்றி. இறுதிக்கட்டத்தில் சிறீலங்காப் படையினருக்கு பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவினால் தான் பெருமளவான ஆயுத வெடிபொருட்கள் கிடைத்தன. இதில் 150 மில்லி மீற்றர் ஆட்லறிகள் மற்றும் பல ஆயுதங்களுடன் தாக்குதல் அழிப்பு திறன்மிக்க 'சிகப்பு அம்பு' ஆயுதங்கள் என்பனவற்றை கொள்வனவு செய்து சிறீலங்காப் படையினின் பாவனைக்கு விட்டார். இதன் மூலமே நாங்கள் வெற்றி பெற்றோம் என்று சிறீலங்காப் படைப் பிரிவின் 58வது டிவிசன் படைத்தளபதி மேஜர் ஜென்றல் சிவீந்திர சில்வா தெரிவித்துள்ளார். 'சிகப்பு அம்புகள்' என்ற ஆயுதம் காவலரண்களை தகர்க சிறீலங்காப் படையினரால் பயன்படுத்தப்பட்டுள்ளமையும் பச்சை காடுகளை பற்றி எரியவைக்கும் உந்துகணை வகையான இக்கனரக ஆயுதம் சீனாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறீலங்காவுக்கு ஆயுதங்கள் – பிரித்தானியா இரத்து

சிறீலங்கா படையினருக்கு ஆயுதங்கள் விநியோகிக்க கூடிய அனுமதி பத்திரத்தை பிரித்தானியா இரத்துச் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிறீலங்காவுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய வேண்டாம் எனவும் பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு கடும் அழுத்தங்களுடன் கூடிய ஆலோசனை வழங்கியுள்ளது. எனினும் பிரித்தானியாவின் கோரிக்கையை புறந்தள்ளி விட்டு, பல்கேரியா, ஸ்லோவோக்கியா, செக் குடியரசு, இத்தாலி போன்ற நாடுகள் சிறீலங்காவுக்கு ஆயுதங்களை வழங்கியதாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். சிறீலங்காவுக்கு ஆயுதம் விநியோகிக்கும் அனுமதி பத்திரத்தை இரத்துச் செய்யும் முனைப்புகளை பிரித்தானிய சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் கரூன் தோமன் மேற்கொண்டாதாக தெரியவந்துள்ளது. இந்த நிலையில் ஐரோப்பிய நாடுகள் பிரித்தானியாவின் தடையை பொருட்படுத்தாது தண்ணீரில் கொண்டு செல்ல கூடிய 30 ஆயிரம் எஸ்.சீ.58 ரக தாக்குதல் ஆயுதங்களை வழங்கியதாகவும் அந்த பாதுகாப்பு அதிகாரி கூறியுள்ளார்.

## ஆயுதம் வாங்க முயன்றவர்களுக்கு 26 ஆண்டு சிறை

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வாங்குவதற்கு முயன்றதாக குற்றம் சாட்டப்பட்ட கனடாவை சேர்ந்தவர்கள் சதாஜன் சரசந்திரன் (30), நடராசா யோகராஜா (55) ஆகியோருக்கு 26, 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளுக்கு அமெரிக்காவில் இருந்து ஏவுகணைகள், ஏவுகணைகளை வீச பயன்படும் கருவிகள் மற்றும் நூற்றுக்கணக்கான ஏ.கே.47 துப்பாக்கிகளை வாங்க முயற்சி செய்யும்போது அவர்களை அமெரிக்க உளவுத்துறை (எப்.பி.ஐ.) 2006ம் ஆண்டு கைது செய்தது. அவர்கள் மீது அமெரிக்க நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. அதில், ஏவுகணைகளை வாங்கி அனுப்ப முயன்ற சந்திரனுக்கு 26 ஆண்டு சிறைத் தண்டனையும், இவற்றை வாங்க உதவியதாக நடராசாவுக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவர்கள் விடுதலைப் புலிகளின் உளவுப்பிரிவு தலைவராக இருந்த பொட்டம்மானின் வழிகாட்டுதலின் பேரில் செயல்பட்டுள்ளதாக அரசு வழக்கறிஞர் தெரிவித்தார். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட மேலும் 2 பேருக்கும் இன்னும் தண்டனை அறிவிக்கப்படவில்லை.

## ரஷ்யாவிடம் ஆயுதக் கொள்வனவு

சிறீலங்கா ரஷ்யாவுடன் பாரிய இராணுவ ஆயுதக் கொள்வனவுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இராணுவ உபகரணங்களை கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. நிலக்கண்ணி வெடிகள், உலங்குவானூர்திகள், ஆயுதங்கள், துப்பாக்கி ரவைகள் உள்ளிட்ட இராணுவ உபகரணங்கள் இவ்வாறு கொள்வனவு செய்யப்படவுள்ளது. மகிந்த ராஜபக்ச தேர்தலில் வெற்றியீட்டினால் அடுத்த மாதம் இந்தக் கொள்வனவு தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த ரஷ்யாவிற்கு பயணம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது மகிந்த வெற்றி பெற்றுள்ளதால் இக்கொள்வனவிற்கான பயணம் மேற்கொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தமிழர் தேசத்தில் மேலும் 25 இராணுவ முகாம்கள்

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு பகுதிகளில் விரைவில் புதிதாக 25 இராணுவ முகாம்கள் நிறுவப்பட உள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட பிரதேசங்களில் இந்த புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்படவுள்ளன. மல்லாவி, பூநகரி, இரணைமடு, முல்லைத்தீவு மற்றும் முக்கிய நிலைகளில் இந்த புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட வன்னிப் பிரதேசங்களில் இராணுவ முகாம்களை அமைக்க வேண்டாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது. இதேவேளை, விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்ட விமான ஓடுதளங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு சிறீலங்கா விமானப் படையினரிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாக சிரேஸ்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

# இனிமேல்....

ச.ச.முத்து

ஒரு வழியாக சிறீலங்காவுக்கான ஜனாதிபதி தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளார். எமது மக்களை கூட்டம் கூட்டமாக கொன்றுகுவிக்க உத்தரவிட்ட ஒரு கோரமுகம் இனிமேல் சிங்கள தேசத்துக்கும் அதனுடன் பலவந்தமாக ஆயுத மேலாதிக்கம் மூலம் இணைக்கப்பட்ட தமிழர் தேசத்துக்கும் தலைவனாக பதவி ஏற்பார்.

உலகம் தமது வாழ்த்துக்களை மலர்ச் செண்டுகளுடன் அனுப்பி பூரித்துநிற்கும். அதிலும் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற பயில்வான்கள் தமது சம்பிரதாயமான வாழ்த்துக்களுடன் ‘மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண வேண்டும்’ என்ற வார்த்தைகளையும் வலுக்கட்டாயமாகச் சேர்த்து மனித உரிமைகளிலும், மானிடத்திலும் இன்னும் தமது ஈடுபாடு செத்துவிடவில்லை என்று காட்டிநிற்பார்கள்.

*ஆனால் தமிழர்தேசமும் தமிழ் மக்களும்..?*

ஆனால். இப்போது எந்த காலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழர் தரப்பு மிகப்பலவீனமான நிலையிலும் குழப்பகரமான தோற்றத்திலும் இருக்கிறது. 2009 மே 19க்குப் பின்னர் அது முன்னோக்கி ஒருசிறிதுகூட நகரவில்லை என்பது ஒரு சோகமான உண்மையாகும். இப்படியே இன்னும் கொஞ்சம் காலம் நிகழ்ந்து

விட்டால் ஈழத்தமிழினம் ஒரு தேசிய இனத்துக்கான தகமைகளையும் வாழ்க்கைப் போராட்ட மூலத்தையும் இழந்து விலங்குகளுக்கு அண்மித்த ஒரு கூட்டமாக மாறி விடக்கூடும்.

அங்கு இருப்பவர்கள் வேறுயாருமல்ல. எங்களுடைய தந்தையும் தாயும் இரத்த உறவுகளும், எம் உயிர் சமூகமுமே ஆகும். அவர்களை இந்த உலகத்தின் ஏனைய மக்கள் கூட்டம் போலவும் அதற்கும் மேலாக வாழவைக்க வேண்டிய கடமை எம் எல்லோருக்கும் இருக்கிறது. ஆகக்குறைந்தது அவர்களை சுதந்திர

மனிதர்களாக இனிமேல் இருக்கின்ற காலம்முழுதும் வாழவைக்கத்தன்னும் வேண்டும். சரி, அதற்காக என்ன செய்யலாம்? நான் எழுதிய கட்டுரையும் அதை நீங்கள் படித்து முடித்து மடித்துவைத்ததும் அது நிகழ்ந்துவிடுமா? அதற்கு ஏதாவது செய்ய வேண்டும். செய்கின்ற அந்த ஏதாவதும் எங்கள் மக்களின் வாழ்வை உயர்த்த வேண்டும். அப்படி ஏதாவது செய்யவேண்டும் என்று நினைக்கின்றவர்கள் எழவேண்டும்.

எமது மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற ஆத்மதுடிப்புடன் எழும் ஒருவனுக்கு இந்தநாளில் நடக்கும் அடுத்த குழப்பம் ‘யாருடன் சேர்ந்து செயற்படுவது?’ என்பதே. அந்த 2009மே 19க்குப் பின்னர் பல பத்து குழுக்களும் அணிகளும் தோற்றம்பெற்றுள்ளன. துரதிஸ்டவசமாக இந்தக்குழுக்கள் அனைத்தும் மே 19க்கு முன்னர் ஏறத்தாள ஒரே அணியாக புலத்தில் நின்றவர்கள். ஒரே விடுதலை இயக்கத்துக்காக ஏதோ ஒரு வேலைத்திட்டத்தில் செயற்பட்டவர்கள். இவற்றில் எந்த அணியை அல்லது குழுவைத் தேர்ந்தெடுப்பது என்பது செயற்பட துடிக்கும் ஒரு தமிழ் இளைஞனுக்கோ தமிழ் யுவதிக்கோ பெரியகுழப்பத்தையும் மனச்சோர்வையும் கொடுத்துக்கொண்டிருக்கிறது.

ஆகவே இனிமேல் என்ன செய்யவேண்டும் என்பதில் நாம்அனைவரும் மிகத்தெளிவாகவும் ஆழமான உறுதியாகவும் எழவேண்டும். மிகவும் அதிகமான சிங்கள மக்கள் தமது தேசத்துக்கான தலைவராக எமது மக்களை அழிக்க ஆணையிட்ட மகிந்தவுக்கே அனுமதியளித்து போர்க்கங்கணம் கட்டிநிற்கின்றனர். இந்த நிலையில் தமிழர்களாகிய நாம் எம்முள் மே19 முள்ளிவாய்க்கால் கோரத்தின்பின் தோன்றிய அனைத்து பிளவுகளையும் பேதங்களையும் மறந்து ஒன்றுபட வேண்டிய வரலாற்றுக் கட்டத்தில் நிற்கிறோம்.

நாம் ஒருவிடயத்தில் மிகத்தெளிவாக இருக்கவேண்டும். முள்ளிவாய்க்காலில் நடாத்தப்பட்ட சிறீலங்காவை முன்னிறுத்தி நடாத்தப்பட்ட பலநாடுகளின் கூட்டுப்படை நடவடிக்கையில் தமிழரின் விடுதலைப் போராட்ட சக்தி தாறுமாறாக சிதைக்கப்பட்டுள்ளது. ஆனால் அது முற்றுமுழுதாக அழிக்கப்படவில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டசக்தி என்பது இரண்டுபெரிய வளையங்களாக சிங்களத்தை நெருக்கியது. ஒன்று, சிங்களஅரச இயந்திரம் எந்த ஆயுதங்களைக்கொண்டு எமது மக்களை அடிமைப்படுத்தி வைத்திருந்ததோ அதே ஆயுதம் மூலமாகவும், மற்றொன்று எமது மக்களின் தார்மீக எழுச்சி மூலமாக தமிழீழத்திலும் சர்வதேச அரங்கிலும். இந்த தார்மீக எழுச்சி இன்னும் சிதையவில்லை. அழியவில்லை. ஆனால் வேகம்குறைந்து போயுள்ளது. வீச்சு மாறிப்போயுள்ளது. எல்லாவற்றிலும் மேலாக முரண்களும் பேதங்களும் அந்த எழுச்சியை காலந்தாழ்த்துகின்றது.

மே19க்குப் பின்னர் தோன்றிய பிளவுகளையும் பேதங்களையும் களையவேணுமானால் அவை எப்படித் தோற்றம்பெற்றன என்ற தெளிவுவேண்டும். அந்த நாளின் பின்னர் தமிழீழ விடுதலைக்கான வழிகளாக பல திட்



மே19க்குப் பின்னர் தோன்றிய பிளவுகளையும் பேதங்களையும் களையவேணுமானால் அவை எப்படித் தோற்றம்பெற்றன என்ற தெளிவுவேண்டும்.

டங்களும் ஆலோசனைகளும் பிரேரணைகளும் எங்கள் மத்தியில் எழுந்துள்ளன. இந்த திட்டங்களும் பிரேரணைகளும் ஆலோசனைகளும் ஒன்றுக்கொன்று மற்றதைசாடியே தமது வழிகளை முன்னிலைப்படுத்த முயலும் போதுதான் முரண்கள் தோற்றம் பெறுகின்றன. இனிமேல் தன்னும் இந்த திட்டங்கள் முறைகள், சபைகள், குழுக்கள் என்பன தமக்குள் மோதுவதை முற்றுமுழுதாகத் தவிர்த்து எமது பொது எதிரிக்கு எதிராக ஒன்றுதிரளவேண்டும். எமது பொது எதிரி எமது தாயகத்தை ஆக்கிரமித்து எமது மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் சிங்களப் பேரினவாதமும் அதற்கு முண்டுகொத்து நிற்கும் பிறசக்திகளும் ஆகும்.

எனவே, எம்முள் கடந்த ஒன்பதுமாதங்களாக தோற்றம்பெற்று விரிந்துவரும் முரண்பாடுகளையும், பிளவுகளையும், பேதங்களையும் இனிமேலும் நீடிக்காமல் இன்றிலிருந்து அவற்றை களையும் முயற்சியில் ஈடுபட வேண்டும். எமது விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈகம்செய்த அந்த மாவீரர்களின் பெயரால் தமிழினம் ஒன்றுபடவேண்டும். தமது பெயர்கூட வெளித்தெரியாமல் போய்வெடித்த உயரிய தியாகங்களின் நினைவால் நாம் அனைவரும் ஒன்றாக நிற்கவேண்டும்.

எல்லாவற்றிலும் மேலானதாக விடுதலைப் போராட்டத்தின் மூலசக்தியாகவும், எமது விடுதலைப் போராட்டத்தின் ஒரே குறியீடாகவும் திகழும் தேசிய தலைவரின் பெயரால் நாம் ஒன்றுபட்டே தீரவேண்டும்.

இனிவரும் காலங்கள் எமது பொது எதிரிக்கு எதிரானதாக எழுச்சிகொள்ளும். தமிழரின் சக்தி முழுதும் விடுதலைக்கானதாக ஒன்றுபட்டு நிற்கும். திரளான மக்கள் எப்போதும் தமது ஒன்றிணைப்பை வெளிப்படுத்த வேண்டும்.